**09.04.2025**

**O.S.No. 49/2011**

**வா.சா. 1: அய்யாவு**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-**

7) வா.சா.1 16.05.2011 கிரய ஒப்பந்த பத்திரத்தை எழுதி கொடுத்ததாக சொல்லும் ராமசாமி மற்றும் அலமேலு ஆகியோர் எனது மாமனார், மாமியார். வா.சா.1 கிரய ஒப்பந்த பத்திரத்தை வரைவு செய்தவர் முகமது அலி என்ற ஆவண எழுத்தர். இந்த ஆவணத்தை தட்டச்சு செய்தவர் சுலைகா பீவி. இந்த ஆவணத்தில் உள்ள எழுத்துக்கள் அனைத்தும் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டவை. ஆனால் தேதி மட்டும் பேனாவினால் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

8) வா.சா.1 கிரய ஒப்பந்த பத்திரத்தில் ச.எண். 5/1 ஏ 3 ல் 3.70 ஏக்கர் நிலத்தை நான் அலமேலுவிடம் இருந்து கிரய பத்திரம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அந்த ஒப்பந்த பத்திரம் ஏற்பட்ட 5 நாட்களுக்குள் மேற்படி கிரய பத்திரத்தை 20.05.2011 ல் பதிவு செய்து பெற்றுள்ளேன். நான் 23.05.2011 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை 25.05.2011 தான் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் நான் 20.05.2011 ல் நான் கிரயம் பெற்ற சங்கதியை சொல்லவில்லை என்றால் சரிதான்.

9) அந்த சட்ட அறிவிப்பில் கண்டுள்ள 2 வது நபர் சரஸ்வதி என் மனைவியின் சகோதரி. கிரய ஒப்பந்தத்திற்கு பின்னிட்டு நடைமுறைப்படுத்தாத பெயரளவிற்கான ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதி பெற்றுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சட்ட அறிவிப்பில் சொல்லப்பட்டாலும் அந்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தை குறித்து செல்லாது என்று எவ்விதமான பரிகாரமும் கோரவில்லை என்றும் அதற்குரிய நீதிமன்ற கட்டணமும் நான் செலுத்தவில்லை என்றால் சரிதான்.

10) நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை 1,2 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டார்கள் என்பதற்கான ஒப்புகை அட்டையை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பு சார்வு ஆவதற்கு முன்பாகவே 30.05.2011 ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பில் எந்த ஒரு தேதியை குறிப்பிட்டு சார்பதிவாளர் அலுவலகம் வருமாறு குறிப்பிட்டு சொல்லவில்லை. அதே

போல மீதி கிரய தொகையை செலுத்தி கிரயம் செய்துக்கொள்ள நான் தயாராக இருந்ததாக எனது வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லவில்லை.

11) வழக்குரையில் பயிர்களை அறுவடை செய்வதற்கு 4 மாத கால அவகாசம் வேண்டும் என்று யார் கேட்டார்கள் என்று குறிப்பிட்டு என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லவில்லை. ஒப்பந்த பத்திரப்படி ஒப்பந்த பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை மொத்தம் ரூ.9,40,000/-க்கு கிரயம் பேசி அதற்கு முன் பணம் ரூ.1,40,000/- கொடுத்ததாகத்தான் சொல்லப்பட்டுள்ளது. வழக்கறிஞர் அறிவிப்பில் மீதி கிரய தொகை வைத்துக்கொண்டு கிரயம் செய்ய தயாராக இருப்பதாக சொல்லாத நிலையில் வழக்குரையில் மேற்படி கிரய தொகையை செலுத்துவதாக எவ்வித லாட்ஜ்மெண்ட் தாக்கல் செய்யவில்லை.

12) என்னுடைய ஒப்பந்தப்படி மீதி கிரய தொகை 8 லட்சம் என்ற தொகையில் வழக்குரையில் மீதி தொகை 5.95 லட்சம் என்று சொல்லியுள்ளது முன்னுக்கு முரணாக உள்ளது என்று சொன்னால் கிரயம் செய்துவிட்டதால் அவ்வாறு சொல்லியுள்ளேன். என்னுடைய கணக்கு படி வைத்துக்கொண்டால் கூட 8 லட்சத்தில் 3.45 லட்சத்தில் கழித்தால் 4.55 லட்சம் தான் வரும் என்றும் ஆனால் வழக்குரையில் 5.95 லட்சம் என்று உள்ளது எதன் அடிப்படையில் என்றால் மொத்தத்தில் 45 லட்சத்திற்கு கிரயம் பேசப்பட்டது என்று சாட்சி சொல்கிறார்.

13) சொத்து மொத்தமாக 45 லட்சத்திற்கு பேசப்பட்டது என்று வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. நான் சரியான சட்ட பிரிவின் படி நீதிமன்ற கட்டணமும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. வா.சா.1 கிரய ஒப்பந்த பத்திரத்தில் சாட்சி கையெழுத்து செய்ததாக சொல்லும் அத்தியப்பன் மகன் பெருமாள் என்பவர் நான் அலமேலுவிடம் பெற்ற கிரய பத்திரத்திலும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். வா.சா.1 கிரய ஒப்பந்த பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் ஒவ்வொன்றும் வெவ்வேறு சர்வே எண்கள். தாவா சொத்து தற்போது தலைவாசல் தாலுகாவில் உள்ளது.

14) வா.சா.1 கிரய ஒப்பந்த பத்திரம் எழுதிய தேதி திங்கட்கிழமை என்று சொன்னால் சரிதான். அந்த பத்திரம் தட்டச்சு செய்தது தலைவாசலில் தான் என்றால் சரிதான். சார்பதிவாளர் அலுவலகம் தலைவாசலில் தான் உள்ளது. நான் வா.சா.1 கிரய ஒப்பந்த பத்திரத்தில் 10 எக்கர் 88 செண்ட் ஒப்பந்தம் போட்டுள்ள நிலையில் ஏன் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் காலதாமதம் ஆகிவிட்டது அதனால் பதிவு செய்யவில்லை. ஒப்பந்த பத்திரத்திற்கு மறுநாள் என் மாமனாரை கடத்தி சென்றுவிட்டார்கள். வா.சா.1 கிரய

ஒப்பந்த பத்திரம் என்னாலும் எனக்கு வேண்டப்பட்டவர்களாலும் தயார் செய்யப்பட்டது என்றும் அதில் உள்ள கையெழுத்து என் மாமனார், மாமியாருடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எதிர்வாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையில் வா.சா.1 கிரய ஒப்பந்த பத்திரத்தை அதில் உள்ள கையெழுத்து என் மாமனார், மாமியாருடையது அல்ல என்று போட்டுள்ளார்கள் என்று சொன்னால் அவ்வாறு தான் சொல்கிறார்கள்.

15) வா.சா.1 கிரய ஒப்பந்த பத்திரத்தில் உள்ளது என் மாமனார், மாமியாருடைய கையெழுத்துதான் என்று நிரூபிக்க கையெழுத்து பரிசோதனை நிபுணர் மனு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல எவ்வித மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அலமேலுவிடம் இருந்த பெற்ற 20.05.2011 தேதியிட்ட கிரய பத்திரத்தை குறியீடு செய்யப்பட்ட பிறகு பெற்றுக்கொண்டேன். நான் கிரயம் பெற்ற சொத்தை நான் ஒரு நபருக்கு விற்றுவிட்டேன் என்றால் சரிதான். அவர் பெயர் ராமலிங்கம் என்று நினைக்கிறேன்.

வழக்கறிஞர் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S Date: 2025.04.09 18:40:13 +0530

**Subordinate Judge, Attur.**